15. மாலைக் கறுப்பழகன் —சொக்கர்
மச்சுன னெகிய அச்சுதவேள்
சோலைக் கிரிதனிலே —கள்ளத்
*துங்க னெனுஞ்சேமன் வங்கிசத்தில்

16. இல்வாழ்க்கை கொண்டபிரான் —கள்ளர்க்
கெல்லாந் தலைமையாம் வல்லாளன்
கல்லாவிற் பால்கறப்போன் —வணங்
காப்புலி சேயொடுங் காப்புலிநான்

---

18. துபிரான பேர்—முஸ்லிமல்லாதவர்.
19. தீனோர்—இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவியவர். A. தீன்—மார்க்கம்.
20. நஸ்ரானி—கிறிஸ்தவர்கள்.

* தொங்கலெனுஞ் (பி-ம்)

17. நாணு விதக்களவும் —மாய
நஞ்சுக ளாகிய வஞ்சனையு
மாணு பரன்சேமன்
வைத்துப் பதுக்கிய பொத்தகமும்

18. அகலாத வித்தையெல்லாம் —படித்
தாளானே ணனெல்லாக் கோளாறும்
வகையாய்த் தெரிந்தபின்பு —நம்மை
வாழ்விக்குஞ் சொக்கரைச் சேவிக்கவே

19. வேணு மெனநினைந்தே —தமிழ்
மீனவன் கூடலிற் போனபின்பு
தாணு த்ரியம்பகனே —நீயே
தம்பமென் றேன்கொடிக் கம்பமுன்னே

20. முன்னேனைத் தெண்டனிட்டேன் —அந்த
மூவர் பிரான்கோயிற் றேவடியாள்
பொன்னரும் பூண்முலையாள் —கஞ்சப்
போதகச் சண்பகக் கோதையுடன்

21. கோதை யபிராமி —முத்துக்
குங்குமக் கோதையாள் சங்குமுத்து
சீதை சிவகாமி —பொன்னின்
சின்னச் சவுந்தரி யன்னமுத்து

22. முத்துமாலை மீனாட்சி —சேர
முன்னடந் தாள்நான் பின்தொடர்ந்தேன்
கத்தூரி வாணுதலாள் —என்னைக்
கண்டாள் திருமணி மண்டபத்தில்

23. பத்திசேர் தூணருகே —நின்று
பார்த்தா ணமக்கிவள் வாய்த்தாளென்றே
கொத்துலாம் பூங்குழலாள் —தமிழ்க்
குங்குமக் கோதைதம ருங்கிற்சென்றேன்

24. சென்றேனைக் கைப்பிடித்தாள் —எந்தத்
தேச முமக்கென்று பேசிக்கொண்டாள்
நன்றுச்சு தெனமகிழ்ந்தே —என்தன்
நாட்டைச்சொன் னேன்வாரும் வீட்டுக்கென்றாள்

25. என்றுள் அருந்துமென்றுள் —கையி
லாகுந்தந் தாளிலைப் பாகுந்தந்தாள்
மன்று ளறிந்திடவே —இறு
மாப்புட னேமனை போய்ப்புகுந்தேன்

26. புகுந்தேனை யாதரித்தாள் —தங்கள்
பூறுவ சிநேகம்போற் சோறுதந்தாள்
மிகுந்த பரிமளமும் —உடல்
மீதினிற் பூசச்சவ் வாதுந்தந்தாள்

27. தாளத் துணைமுலையாள் —வாயிற்
றம்பலந் தந்தாள்க ரும்பதுபோல்
ஆளே யதென்னசொல்வேன் —குளி
ராட்டிக்கொண் டேமச்சு வீட்டிற்சென்றேன்

28. வீட்டிற் பரிமளமுங் —கட்டில்
மெத்தையுஞ் சுற்றிய சித்திரமும்
பூட்டுந் திரைத்துகிலுஞ் —சொக்கப்
பொற்கட்டி யாற்கட்டு மேற்கட்டியும்

29. கட்டு விதானமெல்லாம் —நானை
கண்டிருந் தேன்மனங் கொண்டிருந்தேன்
பட்டு ரவிக்கைக்குள்ளே —வைத்த
பச்சிள நீர்தந்தா ளுச்சிதமாய்

30. உச்சி நகம்பதித்தே —இத
ழுண்டுகொண் டேன்சுகங் கண்டுகொண்டேன்
மெச்சிச்சவ் வாசெனவே —கட்டி
மேவிக்கொண் டாள்குரல் கூவிக்கொண்டாள்

31. கொண்டாடி முத்தமிட்டாள் —மிகக்
கொஞ்சிச் சரசத்தின் மிஞ்சிக்கொண்டாள்
கண்டாசை கொண்டவர்போல் —என்னைக்
கைகலந் தாளதில் மெய்மறந்தேன்

32. மெய்வேர்வை மாறுமுன்னே —பாக்கு
வெற்றிலை யும்புகைச் சுற்றுந்தந்தாள்
கைவேர்வை யும்மருந்தும் —பல
காரத்து டன்கூட்டிச் சேரத்தந்தாள்

33. தந்த மருந்தாலே —மெத்தத்
தள்ளாடித் தள்ளாடி யுள்ளானேன்
சிந்தை தடுமாறி —ஓட்டுச்
சிட்டுப்போல் நானகப் பட்டுக்கொண்டேன்

34. கொண்ட பயல்போல —மெள்ளக்
குங்குமக் கோதையாள் சிக்கிக்கொண்டாள்
உண்ட மருந்தாலே —கையி
லுள்ளதெல் லாங்கள்ளி கொள்ளைகொண்டாள்

35. கொள்ளை கொடுத்தவர்போல் —வந்த
கோப்புங்கண் டேமிணுங் காப்புலிநான்
தள்ளத்தள் ளத்திரிந்தேன் —அவள்
தாய்ப்புலிக் குள்ளானேன் ஈப்புலிபோல்

36. புலிபோல வீறிடுவாள் —வாடா
போருக்கென் பாள்போடா ஊருக்கென்பாள்
கலியோ விதிப்படியோ —சொக்கர்
கற்பனை யோமாமி சற்பனையோ

37. சற்பமுங் கீரியும்போல் —மாமி
சன்னமிட் டாளூரிற் கன்னமிட்டேன்
பொற்பூ ணம்புடவை —கண்ட
பொன்னெயெல் லாங்கொண்டு முன்னம்வைத்தேன்

38. வைத்தேன் மனங்குளிர்ந்தாள் —வெறு
வாய்க்கிலை யுங்கெட்ட தாய்க்கிழவி
அத்தை வகைக்காரி —பின்னும்
ஆதரித் தாளதி லேதரித்தேன்

39. தரித்தே னெருமாதம் —அங்கே
சஞ்சரித் தாள்வல்லி பஞ்சரித்தாள்
சிரித்தே முகம்பார்த்தாள் —ஒரு
சின்னச் சிறைவேணு மென்னச்சொன்னாள்

40. சொன்ன வசனமெல்லாம் —அவள்
தோத்திர மாய்ச்சொன்ன மாத்திரத்தே
பொன்னே மடமயிலே —இதோ
போறேன் சிறைகொடு வாறேனென்றேன்

41. கொண்டுவாறே னென்றெழுந்தேன் —குயில்
கூச்செறி யப்பெரு மூச்செறிந்தாள்
பெண்டுபோற்க ணீர்சொரிந்தாள் —மனம்
பேதலித் தாளென்மேற் காதலித்தாள்

42. காதல்கொண் டாரெனவே —என்னைக்
கட்டிச் சிணுங்கிக்கும் பிட்டுக்கொண்டாள்
பேதை முகம்வாடி —ஒரு
பேச்சும்விட் டாள்பெரு மூச்சும்விட்டாள்

43. தொழுது கடன்கழித்தாள் —அவள்
தோத்திர மாய்நின்ற மாத்திரத்தே
பொழுது விடியுமுன்னே —நீரும்
போய்வாரு மென்றவள் தாயுஞ்சொன்னாள்

44. சொன்ன படிதுணிந்தேன் —ஈசர்
சொக்கரை யுந்தொழு தக்கணமே
பின்னற் கருங்குழலாள் —ஆசை
பின்னிழுக்க விதி முன்னிழுக்க

45. இழுக்கொன்றும் பாராமல் —காக
மேவின துங்குயில் கூவினதும்
ஒழுக்கமென் றேநினைந்தே —சென்றங்
கொல்லையி லேதிண்டுக் கல்லில்வந்தேன்

46. வந்தேன் கடைத்தெருவே —அங்கே
வங்கண மாக்கண்டேன் சிங்கணனைச்
சந்தோஷ மாச்சுதென்றே —சோறுந்
தண்ணீருந் தந்தவ னுண்ணுமென்றான்

47. உண்டேன் பசிதீர்ந்தேன் —அவ
னெத்தாசை யாலங்கே நித்திரையுங்
கொண்டே னெழுந்திருந்தேன் —கோழி
கூப்பிடு முன்வேளை வாய்ப்பெனவே

48. வேறொன்றும் பேசாமற் —போனேன்
வென்றிச் சிரகிரி கண்டுசென்றேன்
வேறொன்று வெம்பரியார் —செவ்வந்
தீசரைக் கும்பிட்டுப் பூசைசெய்தேன்

49. செய்யாருங் காவேரி —யாடிச்
சீரங்க மானம காரங்கத்தில்
ஐயர் பதந்தொழுதேன் —தொழு
தஞ்சாறு காளங்கே சஞ்சரித்தேன்

50. சரித்ரமெல் லாங்கேட்டே —என்னைச்
சந்தித்துப் பேசவே சிந்தித்துக்கொண்
டொருத்தன் றிருப்பதியான் —அந்த
ஊரில்வந் தானவன் பேருஞ்சொன்னன்

51. போான கள்ளனென்றே —அவன்
பேச்சுக்கொண் டேதுணை வாய்ச்சுதென்றே
நீரா ரெனப்பகர்ந்தேன் —அந்த
நேரத்தில் தன்வழி சாரச்சொன்னன்

52. சொற்கேட் டகமகிழ்ந்தேன் —ஒரு
சோடா விருவருங் கூடிக்கொண்டோடம்
பொற்கோ புரவாசல் —தன்னிற்
போய்நின்று சத்தியஞ் செய்துகொண்டோடம்

53. கொண்ட திருவரங்கம் —எனுங்
கோவடி மைத்தொழிற் றேவடியாள்
தண்டா மரைமுகத்தாள் —என்னுஞ்
சந்த்ர கலாவதி சிந்தாமணி

54. சிந்தை களிகூர —மொக்கஞ்
செங்கையி லேபணை யங்கொடுத்தோம்
அந்திப் பொழுதுதனிற் —சென்றுங்
காளுக்கோர் தேவடி யாளைத்தொட்டோடம்

55. தொட்ட கலவியிலே —என்னைத்
தோய்ந்தவள் கண்டுங்கிச் சாய்ந்துவிட்டாள்
நிட்டூர மாய்நினைந்தே —கடு
நித்தையிற் சொக்குப்பொ டித்தாவி

56. தாவியன்ன மென்னடையாள் —இட்ட
தோடுஞ் சவளியும் பாடகமுங்
கோரவைமுத்து மாலையுடன் —முத்துக்
குச்சு வச்ரக்கொப்புக் கச்சுடனே

57. உடைமையுண் டானதெல்லாம் —சோர
ஒக்கச் சுருட்டிய டக்கிக்கொண்டு

திடமா யெழுந்துவந்தேன் —அந்தத்
திருப்பதிக் கள்ள னிருப்பிடத்தே

58. இருபேருங் கைகலந்தே —மனம்
ஏங்கிக் கலங்கிக்கண் தூங்கிவிட்டான்
சரிசாம வேளையிலே —அவன்
றன்னையு முச்சவென் றங்கோரம்

59. மேலான சொக்குப்பொடி —போட்டு
வீட்டுக் கிராணத்திற் பூட்டிவிட்டேன்
காலா வகைப்பணியும் —அந்த
கள்ளிருட் சாமத்திற் கொள்ளைகொண்டேன்

60. கொள்ளைப் பணிகளெல்லாங் —கட்டிக்
கூட்டியே மாராப்புப் போட்டுக்கொண்டு
மெள்ள வெழுந்துவந்தேன் —அந்த
வீதிவிட் டேசெஞ்சிப் பாதையிற்போய்

61. போனே னிராவழியே —கள்ளப்
போர்கடந் தேன்கண்ண னூர்[21]கடந்தேன்
கூனு மதிதவழுஞ் —செஞ்சிக்
கோட்டைகண் டேன்வாசற் பேட்டைகண்டேன்

62. கண்டேன் பலதெருவும் —கடைக்
காவண மும்வீதி யாவணமும்
கொண்டாடு மாரியம்மன் —கோயிற்
கோசிகன் போல்வந்த பூசகனைக்

63. கனமா யுறவுகொண்டேன் —தோளிற்
கட்டிக் கொடுவந்த பொட்டணமும்
மனமே திடமறிந்து —வைத்து
வைத்தங்குச் சோறும மத்திக்கொண்டேன்

64. மத்யபா னங்கொடுப்பான் —சோறும்
வாய்ப்புட னேதரச் சாப்பிடுவேன்
நித்யகா லமுஞ்சுகித்தேன் —என்னை
ரெச்சித்துப் பிள்ளைபோல் வச்சுக்கொண்டான்
—தனஞ்தானனு தானு.

---

21. கண்ணனூர் (S. கந்தபுரம்) சீரங்கத்திலிருந்து சுமார் ஐந்து மைல் தூரத்தில் உள்ளது. இது, ஹொய்சாலா பட்டயங்களில் திரிவிக்ரமபுரம் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இப்பட்டணம் ஹொய்சாலா அரசன் சோமேசுவரன், அவன் மகன் இராமநாதன் ஆகிய இவர்களின் தலைநகராக விளங்கிற்று.

அபாங்குசேகுவின் சேனை செஞ்சியிற் பாளயமிறங்கியது

விருத்தம்

வைத்தவ னிருகண் போல வளர்த்தெனைக் காக்கு நாளில்
முத்தலம் புகழுஞ் செஞ்சி முதுகர ராமு ராஜன்
அத்தல மிழந்த வாறு மபாங்கு சேகு சாய்வை
கைத்தலப் பரிமாக் கொண்டு கலந்தறும் விளம்பு வேனே.

65. கசரத துரகதத்தான் —காயலில்
விசய ரகுநாதப் பெரியதம்பி
புசபல ரணசூரன் —புகழ்வளர்
திசைகளி லுயர்செஞ்சி நகர்தனிலே

66. மாறுடத் துரைகளிலே —மதகரி
யேறுன சீகாஜி ராயன்[22]மைந்தன்
தேறுர்கள் பணிசரணன் —திசையெங்கும்
வீறுன மனுநெறி விளங்குபிரான்

67. செகமண்ட லிகர்கண்டன் —செவ்விமதி
முகமண் டலசுகந்த மோகமதன்
மகிபதி சுகலளிதன் —வாதாடும்
இகல்மரு வலர்புலி ராமுராயன்[23]

68. வெங்கோப வாரணத்தான் —விகசித
பங்கே ருமுக பாக்கியவான்
சங்க்ராம கெம்பீரன் —தரணியிற்
செங்கோல் மனுமுறை செலுத்துமங்காள்

---

22. சிவாஜி ராஜா.

23. ராமுராஜன் சிவாஜியின் புதல்வர். இவருடைய தாய் இறந்தபிறகு சிவாஜியின் மற்றொரு புதல்வராகிய சாம்பாஜி என்பவர் ராமராஜாவை ராஜகட்டத்தில் சிறைசெய்து வைத்திருந்தார். முகலாய சக்கிரவர்த்தி ஔரங்கஜேப் அவர்கள் சாம்பாஜியை வென்ற பிறகு 1689-ம் ஆண்டில் அவருக்குக் கொலைத் தண்டம் விதித்தார். சாம்பாஜி இறந்தபின் 1689-ம் ஆண்டின் கடைசியில் ராமராஜா மஹராஷ்டிரர்களின் அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ராமராஜா முகலாயருக்குப் பயந்து செஞ்சியில் போயிருந்தார். துல்பகார்கான் ஒரு பெரும் படையுடன் வந்து செஞ்சிக் கோட்டையை ஏறக்குறைய ஏழு வருடங்கள் முற்றுகை போட்டுப் பிடித்தார். ஆனல் ராமராஜா தப்பி ஓடிவிடவே முகலாயர் எண்ணம் முற்றும் பலிக்கவில்லை.

69. துரைமுகில் சூலுபுகான்[24] —சிங்கத்
துரைபதி யாமக்க யிசுமா லுகான்[25]
நரபதி தாவுதுகான்[26] —ஏசப்ப[27]
நாயக்க ணதிறுகா ன[28]ப்பாசுகான்[29]

24. துல்பகார்கான்—இவர் முகலாய வீரர்களுடன் தகூஷிணதேசத்தின் மீது படையெடுத்துச் சென்று வெற்றிமாலை சூடிக் கீர்த்திபெற்ற படைத்தலைவர். இவர் இராஜரீகத்திலும் கைதேர்ந்த நிபுணர். சிவாஜியின் இரண்டாவது குமாரர் ராம ராஜா செஞ்சியிலிருந்தபோது அக் கோட்டையை மூற்றுகை போட்டு ஜெயித்தவர். இவருடைய வாழ்க்கையின் வரலாற்றைக் கீழ்க்கண்ட நூல்களில் விரிவாகக் காணலாம்.

J. N. ஸர்க்கார்: ஔரங்கஜேபின் சரித்திரம். வால்யம் 5, பக்கங்கள் 70—109; பீல்: ஔரியண்டல் பயாகிராபிகல் டிக்ஷனரி.

25. மக்கா இஸ்மாயில்கான்—இவர் ஷெர்கான் லோதியின் புதல்வர் களுள் ஒருவர். இவர் ஆதில்ஷா கோல்கொண்டாவில் அரசு செலுத்தியபோது சேனையின் தளகர்த்தராக இருந்தார்; பிறகு வாலிகண்டபுரத்திற்குக் கவர்ன ராகவும் இருந்தார். ஔரங்கஜேப் சக்கிரவர்த்தி கோல்கொண்டாவை ஜெயித்த பிறகு மக்கா இஸ்மாயில்கான் முகலாயருடன் சேர்ந்துகொண்டார்.

26. தாவூத்கான் பானீ என்னுப் பட்டாணி ஆபீஸர் கிலுருகானின் புதல் வர். இவருடைய பெயர், தகூஷிணதேசத்தில் பல பழங்கதைகள்மூலமாக இந் நாள்வரை நிலவுகிறது. இவர் ஔரங்கஜேப் சக்கிரவர்த்தியின்கீழ் பல வருஷங்கள் சேவகம் செய்திருக்கிறார். தகூஷிண தேசத்தின்மீது துல்பகார்கான் படையெடுத்து வந்தபோது அவருக்கு அடுத்தபடியாக தாவூத்கான் படைத் தலைவராக இருந்தார்; பிறகு கர்நாடகப் பிரதேசத்தில் நிஜாமாகவும் இருந்தார். இவர் சரிதை விரிவாக 'தூஜுக்கெ வாலாஜாஹி'யில் கூறப்பட்டிருக்கிறது. (S. M. H. நயினர் தூஜுக்கே வாலாஜாவர். இங்க்லிஷ் மொழிபெயர்ப்பு. சென்னை சர்வகலாசாலை மூலமாக 1934-ல் பிரசுரஞ் செய்யப்பட்டது.)

27. ஏசப்பன்—எச்சப்ப நாயக்கன். இவர், விஜயநகரத்திலிருந்த ஹிந்து ராஜ்யத்தைச் சேர்ந்த பிரதானிகளின் வம்சத்தைச் சேர்ந்தவர். இவருடைய முன் னோர்கள் கஞ்ஜிலிருந்து வந்த ராஜபுத்திரர்கள் என்றும் சொல்லிக்கொள்வார்கள். குதுப் ஷாஹி துரைத்தனத்தில் இவர் சேனை சேகரம் செய்பவர்களில் ஒரு தலைவராக நியமிக்கப்பட்டார். கோல்கொண்டா பிடிக்கப்பட்டபோது கடப்பை ஜில்லாவில் முஹம்மது சாதிக் என்பவருடன் ஒற்றுமையாய் இருந்து முக லாயர்களை எதிர்த்துப் போர் செய்தார். அதற்குப்பின் முகலாயருடன் சேர்ந்து உறவாடினார். பிறகு செஞ்சியில் ராமராஜாவுடன் சேர்ந்துகொண்டார். பிறகு ராம ராஜாவிடமிருந்து பிரிந்து தனியாகச் சிலகாலம் இருந்தார். துல்பகார் கான் அவருக்குக் கர்நாடக பிரதேசத்தில் மூன்று லக்ஷம் வராகன் வருமானம் வரக்கூடிய ஜாகீரும் மன்ஸபும் வாங்கிக் கொடுத்து எச்சப்ப நாயக்கனைத் தன் வசப்படுத்திக்கொண்டார். செஞ்சிக் கோட்டையில் முற்றுகை நடந்து கொண் டிருந்தபோது முகலாயச் சக்கிரவர்த்தி ஔரங்கஜேப் அவர்களுக்கு எச்சப்ப நாயக்கன் ஒரு கடிதம் எழுதினர். அதில் துல்பகார்கான் ராமராஜன் என்ற மஹராஷ்ட்ர அரசனுடன் கூடிச் சதியாலோசனை செய்வதாக எழுதப்பட்டிருந் தது. இக்கடிதத்தை துல்பகார்கானின் தந்தை அஸத்கான் என்ற பிரதான மந்திரி தடுத்துவிட்டார். பிறகு எச்சப்ப நாயக்கன் தர்பாரில் இருந்தபோது திடீரென்று துல்பகார்கான் அவரைக் கைதுசெய்து ராஜத்துரோகத்திற்காகக் கொலை செய்து விடும்படி கட்டளையிட்டார்.

28. நாதிர் கான். 29. அப்பாஸ் கான்.

70. தத்துலுகான்[30] சவ்வாசுகான்[31] —லாடமனத்
தாடாள சதிரிசிங் காடாவுடன்
சுத்தவீர சுத்தருகான்[32] —சூலுபு
*துழுசதி திமிசதி திசழுது[33]கான்

71. தீசுத ணெகுதுகான்[34] —பூலேகான்[35]
தீனயி மாழு[36]கா னலிமருகான்[37]
மதியூகி கவ்வாசுகான்[38] —காணுகான்[39]
மலுக்கு சந்தருகான்[40] மகம்மதுகான்[41]

72. ஆகரை[42] நகர்புரக்கு —மணுடதி
,[43]அபரங்கு சேகுசாய் வருட்படி யே
சேகர மாகக்கூடி —ஓசிருகள்[44]
தெக்கண திசைமுற்றுங் திறைகொள்ளவே

73. அடல்மத கரியுடனே —அறுபதி
ணயிரங் குதிரையும் பொற்தலியரும்
வடவரை கிடுகிடென —அடையலர்
மலங்கிட வேகெற்பங் கலங்கிடவே

---

30. கத்லூ கான்.
31. ஷாத்பாஷ் கான் Coll. ஷாபாஷ் கான். ஷபாஷ் கான்.
32. சப்தர் கான்.
33. சமத் கான்.
34. அஹத் கான்.
35. பஹ்லூல் கான்.
36. இமாம் கான்.
37. **அலிமர்தான் கான்**—இவர், காஞ்சிபுரத்தில் பௌஜ்தாராக இருந்தார்; துல்பகார்கான் என்பவருக்குக்கீழ்ப் படைத்தலைவராக இருந்து பல போர்கள் நடத்தினர். துல்பகார்கான் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி முதலிய பிரதேசங்களில் இருந்த ஜமீன்தார்களிடம் கப்பம் வசூல்செய்யச் சென்றபோது அலிமர்தான் காணும் கூடச் சென்றிருந்தார்.
38. நவாஜ் கான்.
39. கானெ காணன்.
40. மலிக் சுமந்தர் கான்.
41. முஹம்மத் கான்.
42. ஆக்ரா-முகலாய சக்ரவர்த்திகளின் தலைநகரம்.
43. ஔரங்கஜேப் சாஹிபு-முகலாய சக்ரவர்த்தி (1658—1707).
44. P. வஜீர்—மந்திரி.

74. வந்திறங்கி வேலூருடன் —அணிவந்த
வாசியுங் கொண்டாரந்த வாசியினுல்
சந்திரோய் வயிரோயி[45] —கோரப்படைத்
தளத்தைத் துரத்திரண களத்துடனே

75. குறுகலர் திறையிடவே —நடந்தொரு
கூட்டத் துடனேசெஞ்சிக் கோட்டையின்மேல்
கறைபடி வேலாசர் —பேரிகை
கறங்கிடப் பாளைய மிறங்கிடவே

76. தாடாண்மை யுடனேவந்து —செஞ்சித்
தலைவரை சுற்றுமட்ட குலவரைபோற்
கூடார மும்மடித்தே —படங்குகள்
கோட்டி நிசான்[46]களு நாட்டினரே

77. கடகரித் திரள்களெல்லா —நிரைநிரை
கருங்கிரி யெனச்சுற்றி நெருங்கிடவே
மிடைதருஞ் செடியறவே —காடுகள்
வெட்டினர் குதிரையுங் கட்டினரே

78. ஓட்டகைத் திரளுடனே —சுமையெடுத்
தொருதிர ளாய்வந்த எருதுகளும்
கட்டினு ணியணியாத் —துரைமக்கள்
காவலும்வைத் தார்களச் சேவலுக்காய்

79. வடுகருங் கன்னடியருஞ் —சோலைதொறு
மடங்க டொறுமிருந்தா ரிடம்பெறவே
தொடுகடல் வளைந்ததுபோற் —பாளையந்
தொகுத்தினி தரசரும் வகுத்தனரே

80. [47]நரபதி தளமல்லவே —யொட்டி[48]ரெட்டி[49]
[50]நாலுகொண்ட [51]கோலகொண்ட தளமல்லவே
பெருகிய கடலதுபோல் —வந்ததெல்லாம்
பேச்சறி யாத்துலுக்க ராச்சனவே

81. சூட்சம தாத்துலுக்கர் —இனிப்போய்த்
துடிப்பா ரேசிறை பிடிப்பாரே
யாட்சிமனம் வெறுத்ததென்றே —எதிர்த்தமர்
ஆடினு ரென்றுகூடி யோடினரே

---

45. சந்தா வைரோஜி கோர்பரே மகாராஷ்டிர சேனதிபதிகளில் ஒருவர்.
46. P. நிஷான்—கொடி.
47. விஜயநகர வேந்தர்களின் பெயர்.
48. ஒட்டர் தேசத்தரசர் (ஒரிஸா மன்னர்).
49. இரட்டி அரசர்கள்.
50. நால்கொண்டா ராஜ்யம்.
51. கோல்கொண்டா ராஜ்யம்.

82. வீட்டையும் பாராமல் —கச்சுக்கட்டில்
மெத்தையுந் தழுவணையுங் குத்துவிளக்கும்
மாட்டையும் பாராமல் —நடந்தோடி
வாராத மக்களையும் பாராமல்

83. காட்டினிற் புகுவாரும் —வாஞ்சித்த
கைக்குழந்தை யொக்கலையி டுக்குவாரும்
தேட்டத்தி லிச்சையுடனே —மனத்தினில்
நிடமற்றுப் பதுங்கியே கிடப்பாரும்

84. அருமைக்கு ழந்தைகளையே —தப்பவிட்
டலைவாரு மெண்ணத் தோலையாதே
பொருமிப் பொருமி யழுதே —தமைக்கொண்டு
போவாரு முகிலரை நோவாரும்

85. அலைந்திடும் பட்சிபோலே —காட்டிற்சென்
றலைவாரும் பசியினு லுலைவாரும்
தலைவிதி யிதுவெனவே —மடங்களில்
தரிப்பாருந் தூங்கமுந்தி விரிப்பாரும்

86. தப்பவகை யில்லாமல் —அகப்பட்டுத்
தவிப்பாருஞ் செங்கை குவிப்பாரும்
இப்படிச் சனங்களெல்லாம் —மனதுநொந்
தேங்கிக் குடிவலசை வாங்கினரே

87. போனவ ரகந்தோ றும் —போய்ப்பார்த்தேன்
புலியில்லா மனையதி லெலிபோலே
நானதெல் லாமறிந்தேன் —விடுதிக்குள்
நண்ணினேன் மனத்திலொன் றெண்ணினேனே

88. காலவிப ரீதத்தினுல் —நமக்கினிக்
கைக்கான சிறையொன் றுஞ் சிக்காதென்றே
சூலுபு கான்ராயன் —பாளையத்தில்
துரகத மொன்றுகொண்டு வாவினேன்தேன்

89. கோதடி தானெடுத்தேன் —கஞ்சாக்
குடுக்கை கக்குட்படு தடுக்குடனே
மாதடி கோடாலி —குண்டாரம்
மயிற்பீலி விரிசங்கு சக்ரமுடன்

90. கம்பளிக் கயிறுடனே —இடுப்பினிற்
கந்தையுங் கமர்பந்தும்[52] கட்டிக்கொண்டேடன்
வெம்புலி போற்சிவந்தேன் —தவசிகள்
வேஷமாய் வெண்ணீறு பூசிக்கொண்டேடன்

91. ஆண்டிகள் வேஷங்கொண்டேடன் —எண்ணுமல்
அடர்ந்தேதறிப் பாளையத்தில் நடந்தேனே
வேண்டிய வீதிகண்டேடன் —அவரவர்
விடுதியெல் லாங்கண்டேடன் சடுதியிலே

92. கடைத்தலை வீதியிலே —மணிய
காரியக் காரர்தலை யாரிகளும்
திடத்தொடு மிருக்கக்கண்டேடன் —துரைகளொ
சிருக ளிருக்குங்கூ டாரங்கண்டேடன்

93. (நலம்புனை சூலுபுகான் —கூடாரத்
தாசார வாச லதுவுங்கண்டேடன்
ஈடற்ற படைநெருங்கும் —வங்கார
எச்சப்ப நாயக்கன் வாசல்கண்டேடன்)

94. கூடார வாசலிலே —லாடர்கள்[53]
கூட்டமும் பக்கிரு[54]க் கூட்டங்களுஞ்
சோடாக விருக்கக்கண்டேடன் —மனத்தினிற்
சூழ்ச்சியாய்க் கையெடுத்துத் தாழ்ச்சிசெய்தேன்

95. ஆவுக்காஞ் சாத்தையென்றூர் —சாய்புநான்
ஆபுலக்கா புலத்தி லாயோ மென்றேறன்[55]
காவுரே காணு[56] வென்றூர் —இதுநல்ல
கருமமென் றேசென் றருகிருந்தேன்

96. கடைபடுங் கஞ்சாத்தண்ணீர் —பாத்திரத்திற்
கட்டளையிட் டார்பிரமன் கட்டளையென்றே

---

52. கமர் பந்து—P. கமர் (அரை) + P. பந்த் (கட்டுதல்) = அரைக்கச்சு.

53. லாடர்—லாட தேசத்தவர். குஜராத், பம்பாய் மாகாணத்தின் சில பாகம் ஆகிய இவற்றிற்கு லாடதேசமென்பது பழம்பெயர்.

54. A. பகீர்—ஒரு நாள் உணவு உள்ளவனுக்கு பகீர். (ஏழை) என்று பெயர். ஒன்றுமில்லாதவனுக்கு A. மிஸ்கீன் (யாதுமற்றவன்) என்று பெயர்.

55. U. ஆவ் கஹான் ஜாதெ (வா, எங்கே போகிறாய்?) ஆப் புலாதெதெ இஸ்லியெ ஆயா (நீங்கள் கூப்பிட்டதால் வந்தேன்).

56. U. காவ் ரெ கானு—(சோறு சாப்பிடு).

இடையூறு பேசாமல் —மண்டிபோட்
டிருந்து விசுமிச்சொல்லி[57] யருந்தினனே

97. கறிகளும் சொட்டிகளும் —அவாவர்
கையார மெய்வழக்கஞ் செய்தார்களே
அறிவுள பெரியவர்போல் —காலுமதை
ஆசாரத் துடன்கொண்டேன் கூசாமலே

98. கலக்கிய வங்கி[58]வெறியால் —கண்சிவப்புங்
கலந்திட நாவும்பல்லு முலர்ந்திடவே
மயக்கமுந் தியக்கமுமாய்க் —காலுங்கையும்
மடக்கி யொருபுறத்தில் முடக்கினனே

99. கிறுகிறென் றேமயங்கிக் —கோதடியிற்
கிடந்தேன் சூரியனு மடைந்தானே
நறுமலர்த் தொடைமார்பன் —எச்சப்ப
நாயக்கன் புண்யச காயத்திலுல்

100. போனகக் காரர்வந்து —வண்டகம்
போஞ்செய ராவென்[59]ரூர் வாஞ்சையுடன்
ஈனமிலா தெழுந்திருந்தேன் —பாத்திரம்
எடுத்தேன் பந்தியிற்சென் றடுத்தேனே

101. கூண்டிருந் தசனஞ்செய்தேன் —பசியினிற்
குறைந்த வயிறனைத்தும் நிறைந்திடவே
வேண்டிய சோற்றையுண்டு —வயிறு
வீங்கியே கண்களுந் தூங்கினனே

102. விடிந்தபின் னெழுந்திருந்தேன் —பாளைய
வீதியு மவரவர் சேதிகளும்
உட்சையாய்ப் பார்த்தறிந்தேன் —அங்கங்
குறவுகொண் டவரவர் திறவுங்கண்டேன்

103. கோப்புகள் தினையுங்கண்டேன் —பட்டாணிக்[60]
கூட்டமு நாட்டமுங் குறிப்புங்கண்டேன்

---

57. பிஸ்மில்லா(ஹ்) சொல்லி.

58. H. பங்க் = குடிவகை.

59. இது தெலுங்கு வசனம். சாப்பிட வா என்பது பொருள்.

60. பட்டான்—வடமேற்கு எல்லைப்புறத்தில் வசிக்கிற ஜாதியார். இவர்கள் இஸ்லாம் மார்க்கத்தைச் சார்ந்தவர்கள். இவர்களுக்கு 'அப்கான்' என்ற பெயரும் உண்டு. இந்தியாவில் ரோஹில்கண்டு பிரதேசத்திலும், மற்றும் சில பாகங்களிலும் இக்கூட்டத்தார் வசிக்கிறார்கள்.

காப்புகள் தனையுங்கண்டேன் —தலையாரி
காவலும் படுக்கையுங் களமுங்கண்டேன்

104. அறிந்திடும் பழையவர்போல் —ஆளோடே
ஆளாகப் பதினைந்து நாளிருந்தேன்
மறந்திகழ் சூலுபுகான் —ஏறிய
வாசியி லுத்தமத் தேசிதனைக்

105. காத்திருந் தேவல்செய்யும் —பயல்கள்வங்
கணமாச் செனக்கது குணமாச்சே
தோத்திர மாக்குதிரைப் —பாஷையுந்
தொழிலையும் பரிசித்தேன் வழிவசமாய்

106. வாசியைக் களவுகொள்ள —இன்றமா
வாசி யிருட்டுவந்து வாய்ச்சுதென்றே
ஈசலைப் போலொதுங்கித் —தனித்தோ
ரிடத்தே சென்றுநான் படுத்தேனே

107. ஓளித்தே படுத்திருந்தேன் —பேசாமல்
ஊமனைப் போலநடுச் சாமத்திலே
விழித்தேன் எழுந்திருந்தேன் —கச்சைசக் கட்டை
மெல்ல விறுக்கிக்கொண்டேன் சல்லடத்தைக்

108. கண்ணுக்குத் தெரியாத —குளிசமுங்
கட்டிக்கொண் டேன்திலத மிட்டுக்கொண்டேன்
எண்ணிக்கை யில்லாமல் —பாளையத்
திறங்கின பேரெல்லா முறங்கக்கண்டேன்

109. மாயமா யொண்டியொண்டிப்போய் —இதுநல்ல
வாய்ப்பென்று கூடாரம் போய்ப்புகுந்தேன்
தேயத்திற் கிடையாத —உத்தமத்
தேசியைப் பிடிக்கவு பாயமிட்டேன்

110. மரகத மலைதனையே —உருச்செய்து
வைத்துக் கடைந்தெடுத்த சித்திரம்போல்
குரகதத் தருகு சென்றேன் —காலைத்தொட்டுக்
கும்பிட்டேன் மேலைத்தொட்டு முகந்தடவித்

111. திரள்மணிக் கடிவாளம் —வாயினிற்
செறித்தேன் வாயினுரை தெறித்திடவே

குரசுக்குள் மேலான —தலைவிட்டுக்
குறிப்பாய்க் கழுத்தினில் தெறிப்பும்விட்டேன்

112. முறுக்கிட்ட பாசாளம் —தனைவிட்டு
முறுக்குப் போட்டுச்சுக சுறுக்குடனே
சறுக்காமல் விழிப்புடனே —கைக்கச்சைத்
தாங்கி வெளியில்மெள்ள வாங்கினனே

113. வெளிக்கொண்ட குதிரையின்மேல் —அடியேன்
மேற்கொள்ள வேண்டுமென் றுக்ரமித்தேன்
கழிக்கம்புச் சோணங்கிநாய் —விழித்தென்னைக்
கலைத்திட வொருசத்தங் குலைத்திடவே

114. சடுதியிற் குலைத்ததென்றே —உறங்கிய
சாணிப்[61] பயல்களும்பட் டாணிகளும்
திடுதிடென் றோடிவந்தே —குதிரையைத்
தேடினர் சுற்றும்பிற்று மோடினரே

115. தக்காது குதிரையென்றே —விட்டொளிக்கத்
தலமற்று நடக்கப் பலமுமற்றுப்
[62]பக்காழிப் பொதியெடுக்குந் —துருத்திக்குள்
பதுங்கிக்கொண் டொருபுற மொதுங்கினனே

116. பறிபட்டுத் தேடினபேர் —முறுக்கிட்டுப்
பாயும் புரவினின்ற சாயல்கண்டே
தெறிபட்ட கள்ளனேயே —பதனமாத்
தேடும் வழிக்காவல் போடுமென்றார்

117. பந்தமும் பகல்வத்தியுந் —தீவட்டியும்
பார்த்த திசையெலாங்கண் பூத்திடவே
அந்தவன் விருட்டை யெல்லாம் —பட்டப்பக
லாக்கினர் திசையெங்கும் நோக்கினரே

---

61. H. சானி—யாசகன்.

முகலாயர் சேனையில் இராணுவசேவகர்களேயன்றிப் பிறரும் கூடியிருப்பது வழக்கம். வணிகர் தம் பண்டம்பாடிகளுடனும், குடியானவர் தானிய தவசங்களுடனும் படைகள் செல்லும் இடமெல்லாம் செல்வார்கள். இராணுவ சேவகர்களுக்குப் படி அளக்க முகலாயசர்க்காரால் நியமிக்கப்பட்ட தானிய வியாபாரிகளும் இருப்பார்கள். இன்னும் ஹகீம்களும், மாந்திரிகர்களும் கூடவே செல்வார்கள். இவர்கள் எல்லோரும் தத்தம் தொழிலில் கவனமாயிருப்பார்கள். இவர்களை அண்டிப்பிழைக்க யாசகர்பலர் செல்வார்கள். இவர்கள் தேக வலிமை யுடையவர்களாய்த் தம் வாழ்நாளெல்லாம் குடும்பத்தோடு படைகளுடனே கழிப் பார்கள்.

62. H. பகால்—தண்ணீர் எடுப்பதற்குத் தோலினாற் செய்யப்பட்ட பை.

118. (தெற்றிய குடிசைகளும் —புல்லுக்கட்டும்
திரைகளும் காணக்கொப் பரைகளுடன்
சுற்றிய விடுதிகளும் —இடம்பெறச்
சோதித்தா ரென்றுமனம் பேதித்தேனே)

119. துருத்திக்குட் பதுங்கிக்கொண்டு —கிடப்பது
துறையல்ல தப்புவது முறையெனவே
பொருத்தமுற் றெழுந்திருந்தே —ஓடிப்போய்ப்
பொடுபொ டெனவிறகு நடுவொளித்தேன்

120. துணிவுட னெளித்திருந்தேன் —சாய்ந்திடுந்
தோட்கட்டி லொருகருந் தேட்கொட்டவே
அணிகெட்டுத் தடுமாறித் —தேள்விடம்
ஆற்றுமல் மதியையுந் தோற்றேனே

121. எரித்திடுங் கடுப்பதனல் —படபடென்
றீரல் துடித்திடக்கண் ணீர்சொரிந்தேன்
(ஒருத்தனுய் அலைந்திருந்தேன் —பாப்பாத்தி
உப்புக்கண்டம் போக்கடித்த ஒப்புப்போலே

122. மறுமொழி பேசாமல் —கச்சைக்குள்
மருந்திருந் ததுமெடுத் தருந்தாமல்
குறுகுறென் றேவிழித்தேன் —கள்ளனத்தேள்
கொட்டின தென்றபேர் மட்டுமாச்சே

123. கறுப்புக்கண் டால்வருவார் —துருக்கர்
கபடரென் றேநினைத் தவிடம்விட்டேன்
சுறுக்குடன் கிடந்துருண்டேன் —நான்செய்த
துர்ச்சனத்துக் கானகர்ம லட்சணம்போல்

124. ஐயையோ நெருஞ்சிமுள்ளும் —முனைக்கல்லும்
அழுத்தி முதுகுநெஞ்சைக் கிழித்திடவே
கைகால்கள் பதறிக்கொண்டே —உருண்டுருண்டு
கலக்கத்தி லேவிழுந்தேன் சலக்கத்திலே

125. தாழ்ந்துருண் டோடிவந்தே —ஏதுங்கெட்ட
சதுக்கான குழியிலே சொதுக்கெனவே
வீழ்ந்தவன் கள்ளனென்றே —காரியம்
வெற்றிதா னெனவந்து சுற்றினரே

126. சுற்றிலே வளைந்துகொண்டே —துருக்கரும்
தொடுகட லெனவந்த வடுகருடன்
பற்றுவான் தொங்கச்சிக்கிணை —விடமோக்க
பட்டிவச்சி கட்டிவைச்சி கொட்டுகொட்டென்பார்[63]

127. சோராயெ பக்குரேயரே —வெட்டி
சோது மது[64]நிரை வாதி*யென்பார்
ஏலாத களவுசெய்தான் —கள்ளனிவன்
எந்தநக ரத்திருந்து வந்தானென்பார்

128. குச்சுச்சூள மகனிவன்தான் —குதிரையை
உச்சிக்கொள்ள வந்தானென்று கச்சுப்பிச்சென்பார்
எச்சுப்போய்க் கிடக்கிறனென்பார் —இனிக்கரை
யேற்றுமென்பார் யார்பொறுப்பார் நாற்றமென்பார்

129. மூக்கைச் சுளித்துக்கொள்வார் —முகமாறி
மூச்செறிந்திவனுக்கு வாய்ச்சுதென்பார்
காக்கை களும்பொருந்தா —நாற்றத்தைக்
கண்டானிவன்பொறுத்துக் கொண்டானென்பார்

130. துடக்கென்று பாராமல் —அடியேன்
துலைக்குழிக் கழுதைபோற் சலக்கத்திலே
கிடக்கிற சமயத்திலே —முட்டுக்
கீழ்க்கையிட் டொருபயல் தூக்கினனே

131. முட்டுக் காளவாய்போலே —தீண்டாமல்
முழுகச்சொன் னருடல் கழுவிக்கொண்டேன்
கட்டிக்கொண் டனைக்கொடுபோய் —நான்செய்த
காரியம் சொல்லித்தல யாரிமுன்னே

132. விட்டிவன் பதனமென்றூர் —அவனெரு
வீட்டுக்குள் ளேயடைத்துப் போட்டுவைத்தான்
கட்டோடே கிடந்துருண்டே —விடிந்திடுங்
காலைக்குள் ளேசிறைச் சாலைக்குள்ளே

133. பெரியோர் பெருந்தலையார் —இல்லாமல்
பேயும் காயுமயிர் பிடித்திழுத்துத்
தரியா தெனைகடத்திக் —கொண்டுபோய்த்
தாவூது கான்முன் னேவிடுத்தார்

134. பட்டாணி ராவுத்தர்மார் —துரைமக்கள்
பாளையக் காரர்கள் அனைவோரும்
அட்டாள தேசத்துண்டோ —கள்ளனிவன்
அடக்கமும் ஒழுக்கமும் பாருமென்பார்

135. எல்லோரு மொருமுகமாய்க் —கூடிவந்
திருக்கிற சமயத்தி னெருக்கத்திலே
நில்லாமல் துரத்துமென்பார் —தவறுசெய்
நெறிகேடன் தன்முகத்தில் அறையுமென்பார்

136. வெட்டவா ளுறைவிடுவார் —கோபித்து
மிதிப்பார் சவுக்கெடுத்து வீசுமென்பார்
கிட்டவா வெனவுதைப்பார் —வதென்று
கேட்பார் நல்லபலன் கிடைத்ததென்பார்

137. ஆரிவன் காணுமென்பார் —நேற்றெல்லாம்
ஆண்டியாய்த் திரிந்தவன் காணுமென்பார்
பாரிவன் துணிவையென்பார் —ஆள்விட்டுப்
பார்க்கப் படாதிவன் மார்க்கமென்பார்

138. உடன்தையாய்த் திரிந்தானென்பார் —அளவிட்டு
ஓட்டைக்காட்டில் முழக்கம்பு வெட்டுவானென்பார்
திடந்தனைப் பாருமென்பார் —மணலையுந்
திரிப்பான் கல்லில்நா ருரிப்பானென்பார்

139. களவுசெய் பாதகனைத் —துரைமக்கள்
கண்ணாரப் பார்க்கவு மொண்ணுதென்பார்
பிளவுசெய் தெறியுமென்பார் —வாஞ்சித்த
பேரைப் பொறுபொறென்று பூரையிட்டு

140. மரகத மலையதிபன் —தாவுதுகான்
மறுமொழி பேசாமல் முறுவல்செய்தார்
நரபதி சூலுபுகான் —சமுகத்தில்
நடத்தும் இவனையப்பால் கடத்துமென்றார்

141. ... ...

சுந்தர மகராயன் —சூலபு

துரையுடை சமுகத்துக் கெனைநடத்திக்

142. கொண்டுபோய் முன்னேவிட்டு —நான்செய்த

கோலத்தை யுந்திருட்டுச் சாலத்தையும்

பண்டுபார்த் ததைப்போலப் —படிப்படி

பகர்ந்தா ரவர்முகம் பார்த்தேனே

143. கொதிக்க திக்குலத்தென்றூர்[65] —சாய்புரீர்

கோபஞ்செயா தேயும்நான் காபரெ[66]ன்றேன்

எதுக்கோ சிரித்துக்கொண்டார் —இருந்தவர்

எல்லாரு மெனைப்பார்த்துச் சவ்வாசென்றூர்

144. சிரித்துத் தலையசைக்கவே —நமக்கினிச்

சீவனுக் கழிவில்லை யெனநினைந்தேன்

தரித்துத் திடமாய்நின்றேன் —காதிமார்[67]

தன்னை யழைத்திவனுக் கென்னவென்றூர்

145. காதிமா ரெல்லாரும் —பொறுக்கானிற்[68]

காணு முறைமை கடக்காமலே

கோதிலா தறிந்துணர்ந்தே —இவன்றனைக்

குறிப்புடன் காலுங்கையும் அறுத்திடென்றூர்[69]

146. சொன்னமொழி தனைக்கேட்டுச் —சூலபுகான்

துரந்தரன் முத்திரைமோ திரந்தனையே

*தலையாரி கையிற்கொடுத்தே —இவன்றனைச்

சாகாமல் காலுங்கையு மறுத்திடென்றூர்

147. சொன்னகட் டளைப்படியே —அடியேனைத்

துடித்திடக் கையைக்கட்டிப் பிடித்துக்கொண்டு

---

65. இந்த உருது வசனம் மிகவும் சிதைந்துள்ளது. நீ யார்? எங்கிருந்து வந்தாய்? என்ற பொருளைக் குறித்துநிற்கிறது.

66. A. காபிர்—முஸ்லிமல்லாதவர்.

67. A: காதி + T. மார் = முஸ்லிம் நியாயாதிபதி. வில், கிரிமினல் முதலிய வழக்குகளையெல்லாம் விசாரணைசெய்து தீர்ப்புச் சொல்லுகிறவர்.

68. A. புர்கான்—முஸ்லிம்களின் வேத புத்தகமாகிய திருக்குர்ஆனின் மற்றொரு பெயர். பொய்யினின்றும் உண்மையைப் பிரித்தறிவிக்கக் கூடியது என்பது பொருள்.

69. திருடினவனுடைய கைகள் இரண்டையும் வெட்டிவிடு என்று திருக்குர்ஆனில் கூறப்பட்டிருக்கிறது. (குர்ஆன் 5 : 37).

முன்னும்பின்னு மாகவென்னைச் —சவுக்கடி
மூட்டிக் கடைத்தெருவே கூட்டிச்சென்றார்

148. காதினி லறையறைந்து —கழுத்துக்கும்
காலுக்கும் எருக்க மாலையிட்டு
வீதி தொறும்நடத்திக் —கண்டவர்கள்
விலக்கவும் கேளாமல் அலக்கழித்தார்

149. கோட்டைக்கப் புறமகற்றி —அவரவர்
குழுவும் கடைத்தெருவில் வெளியும்விட்டுப்
பேட்டைத் தெருவில் விருத்தி —அம்பட்டப்
பிரமனை யழைப்பித்தார் அரமனையார்

150. கருவி பிரமனெடுத்தே —கூர்மைகள்
காட்டக்கற் சாணையில் தீட்டிக்கொண்டே
வரையும் குறிப்புங்குறித்துச் —சுருக்குடன்
வலக்காலும் இடக்கையும் வாங்கினனே

151. ஆக்கினைக் களரிக்குள்ளே —அங்ஙனே
அயர்ந்து களைதாங்கி மூச்சொடுங்கி
நாக்கொடு வாய்குழறி —உடலம்
நடுங்கிப் பதைபதைத் தொடுங்கிவிட்டான்

152. துலங்கிய சோலைமலை[70] —தனிலுள்ள
தோழ ருடனிருந்து வாழாமல்
இலங்கிய மதுரையிற்போய் —சொக்கரைக்கை
யெடுத்த பலன்நமக்குக் கிடைத்ததென்றே

153. அழுது புலம்பிப்புலம்பி —விதிப்படி
யாச்சு தெனவேபெரு மூச்செறிந்து
பொழுது புகுதுமளவும் —வேதனையால்
புரண்டு புழுதிமண்ணி லுருண்டுருண்டு

154. விதியால் மதிமயங்கிக் —கிடக்கிற
வேளை தனிலேயந்தப் பாளையத்தில்
பதியா யிருக்கிறபேர் —வந்துவந்து
பார்ப்பாரு மேனென்று கேட்பாருமே

---

70. சோலைமலை (அழகர் கோயில்). இக்கோயில் மதுரைக்கு வடக்கே பத்துமைல் தூரத்தில் உள்ளது.

155. ஈனக் கள்ளனிவன்தான் —காலுங்கையும்
இழந்தா னிதுதிரு வுளந்தானென்
றதிசயம்* பார்க்கவந்து —சுற்றிச்சுற்றி
யலைவாரும் எண்ணத் தொலையாதே

156. அந்தச் சமயத்திலே —வகுதை
அவுதல் காதி[71]பிள்ளை சுதனேனென்
மந்தரத் திண்புயத்தான் —கனதுரை
மாமுகயி னுப்பிள்ளை[72] மகராசன்

157. வெம்பிய மதகரியான் —காயல்
விசைய ரகுநாதப் பெரியதம்பி[73]
தம்பித் துணையெனவாழ் —குங்குமத்
தாம மிலங்குபுய மாமுகயினன்

158. சென்னபட் டணத்திருந்து —செஞ்சியில்
செருக்குட னேவந் திருக்கையிலே
அங்ஙகர் தனிலடியேன் —களவுசெய்
தாக்கினைப் பட்டவென்னைப் பார்க்கவந்தார்

159. வந்துநின் றேதெனவே —எனையந்த
மண்ட லாதிபதி கண்டிரங்கி
எந்தவூ ரெந்தத்தேசம் —நீயாரென்
றியம்பினர் மனதினில் நயம்பெறவே

160. வார்த்தையெலாங் கேட்டபோதே —சோலை
மலைக்கள்ள னென்றுநான் தலத்தைச்சொன்னேன்
பார்த்தபோது சவ்வாசென்றே —எலுமிச்சம்
பழத்துக்கு மெண்ணெய்க்கும் பணங்கொடுத்தார்

161. ஏதுமற்ற பரதேசி —இவனைக்கை
யேற்றுப் பரிகரித்துப் பார்த்திடென்றே
தீதற்ற பண்டிதர்க்கு —நூறுபொன்னும்
திட்டமாய்ச் சம்பளமுங் கட்டளையிட்டுக்

---

71. A. அப்துல் காதிர்.

72. இவர் சீதக்காதி மரக்காயரின் இளைய சகோதரர். இவர் முழுப் பெயர் மாமூன் நயினாப்பிள்ளையாக இருக்கலாம்.

73. இது சீதக்காதியின் பட்டப் பெயர். இப்பெயரின் விவரத்தை இந் நூலின் முகவுரையுட் பார்க்க.

162. காயத்தை யாற்றிக்கொண்டு —கீழக்
கரைக்குப் பெரியதம்பி மரக்காயர்
வாயிற் றலத்தில்வந்தால் —உன்னுடைய
வறுமை தொலைந்திடுமென் றுறுதிசொல்லிக்

163. கனதுரை மாமுகயினைப் —பிள்ளையென்மேற்
கருணை புரிந்தெழுந் தருளியபின்
எனைவோருங் கூடியிருந்தே —காய்ச்சியொத்
திட்டா ரதில்மருந்து கட்டியபின்

164. பத்தியந் தவறுமல் —சோறும்
பசியறிந்து கொடுத்தார் ருசிபெறவே
முத்திரைப் பதமாகக் —கெடுவிட்டு
மூன்றுநா ளைக்குள்ளே கடுப்பாற்றிக்

165. காயமு நாளுக்குநாள் —குணமாய்க்
கருந்தழும் பேறவே மருந்துகட்டித்
தாயென உபசரித்து —நோய்தீரத்
தற்காத்து ரட்சித்தார் மிக்காகவே

166. நடுத்தலம் புகழ்மதவேள் —மாமு
நயினை மகிபதி கையினிலே
கொடுத்திடும் பணத்தாலே —நானைரு
குதிரையும் வாங்கிக்கொண்டேடன் சதிருடனே

167. ஆளொன்று கூட்டிக்கொண்டேடன் —செஞ்சியில்வந்
தலைந்த பாவமெலாந் தொலைந்ததென்றே
நாளொன்றும் கேட்டுக்கொண்டேடன் —சீக்கிரத்தில்
நடந்தேன் தொலைவழி கடந்துசென்றேன்

168. வாலிகொண்ட புரங்கடந்து —அரியலூர்
வழியும் புதுக்கோட்டை வெளியும்விட்டுச்
சோலியொன்றும் பாராமல் —திருமரு
தூருங் கடந்துதொண்டி யூரில்வந்தேன்

169. கோதற்ற தொண்டிகடந்தேன் —ல்லமணக்
குடியுந் திருப்பாலைக் குடியும்விட்டேடன்
பாதைக்குள் வாடியும்விட்டேடன் —தேவி
பட்டணமும் வந்துகண்டே னிட்டமுடனே

170. திருந்தலர் பணிபாதன் —நரபதி
•செகபதி சேதுபதி ரகுநாதன்.[74]
பொருந்தமனு முறைசெய்யும் —ராமநாத
புரத்தில்வந் தன்றிரவு தரித்திருந்தேன்

171. வர்த்தக மன்னியர்சூழ் —பெரியதம்பி
மரக்காய ராசார வாசல்வந்தேன்
சுத்தவீர ரணசூரன் —செய்தகாதி
துரையெங்கே யென்றேன்கீழக் கரையிலென்றார்

172. அத்தலந் தனைக்கடந்தே —கண்மாயுப்
பளத்தையுங் கண்டுதிருக் குளத்தில்வந்தேன்
வைத்தபண மரத்துக்கும் —காலுக்கும்
*வாரைக் குளத்தில்மூழ்கிக் கரையேறிக்

173. கணத்தினில் வழிகடந்தேன் —பாலையாறும்
கடந்தே ணெண்டிசைகொண்டி கடந்தேனை
மணற்சரி வதனைக்கண்டேன் —சாலையும்
வாய்ப்பான சிங்காரத் தோப்புங்கண்டேன்

174. கொடிக்கால் மணலுங்கண்டேன் —செம்பொன்
குடம்வைத்த வேகாந்தர் மடமுங்கண்டேன்
[கடைத்தலை வீதிகண்டேன் —லெப்பைமார்[75]
காலிமா[76] ரோதும்பள்ளி வாயில்கண்டேன்]

175. விருதுமன் னியர்கண்டன் —காயல்
விசய ரகுநாதப் பெரியதம்பி
கருதலர் திறையளக்கும் —வாசலைக்
கண்டேன் மனங்களி கொண்டேனே

176. சந்திக்கு வந்திருக்கும் —துரைமக்கள்
தானை பதித்தலைவர் யூகிகளும்
மந்திரிப் பிள்ளைமாரும் —கணக்கரும்
வருக்கரும் மன்னியரும் வன்னியரும்

177. நிரப்பிடு மாசாரத்தே —நாலுமந்த
ரெருக்கத்தி லொருபுற மிருக்கச்செய்தே

---

74. கிழவன் சேதுபதி என்று விளங்கிய இரகுநாத சேதுபதி (கி. பி. 1674—1710).

75. தமிழ் முஸ்லிம்களுக்கு மார்க்கக் கிரியைகளை நடத்தி வைக்கிற புரோகிதர்.

76. A. காலி + T. மார்—முஸ்லிம் நியாயாதிபதி.

திருப்பாற் கடல்போலெனை —ரட்சித்த
சீமான் அவுதல்காதி மாமுகயினன்

178. வரக்கண் டெழுந்திருந்தே —கும்பிட்டேன்
மார்க்கண்டன் போலிரென்று வாழ்த்திக்கொண்டேன்
இரக்கஞ்செய் தெனைநோக்கி —என்பிளாய்
எப்போ என்றூர்நா னிப்போவென்றேன்

179. செங்கைமுகில் மாமுகயினன் —நல்லதென்று
சேகுக்கண்டு[77] மன்னவன்முன் பாகச்சென்றூர்
தங்களிலே யிருடோரும் —ரகசியந்
தனைப்பேசி மரக்காயர் சமுகத்திற்போய்

180. சேகுக்கண்டு மரக்காயர் —என்னுடைய
சேதிசெய்த காதிதிருக் காதிலுரைத்தார்
ஆகட்டென்று முடிதுளக்கி —அவனையிங்
கழைபுமென் ரூளையவ ரனுப்பினரே

181. ஆனவர்கள் வந்துசொலவே —நமக்கினி
அட்டபோகங் கிட்டுமினித் திட்டமெனவே
காணுலா வியதோடையான் —செய்தகாதி
கதிர்ப்பிர பைதங்குஞ் சவுக்கையின்மேல்

182. பிறைதுத லியர்மதவேள் —மீராப்
பிள்ளை[78] மரக்காயர் வள்ளலுடன்
திறமுள அதிசூரர் —பலபல
செய்திகள் யோசனை செய்திடவே

183. வாரிசை செய்துகயினு[79] —னுடைசுதன்
வாலமன் மதனைப் போலிருக்க
மாரதர் தொழுசரணன் —குட்டி
மாப்பிள்ளை யொருபுறம் மகிழ்ந்திருக்க

184. மாதர்கள் மதரூபன் —எனவரு
மாப்பிள்ளை மாமுகயி னுப்பிள்ளையும்
பூதர புயசயிலன் —சேகுக்கண்டுப்
பூபதி யுடனெரு புறத்திருக்கச்

77. A. வைஷக் + A. கனி. 78. P. மீரான் + T. பிள்ளை.
79. A. சய்யித் + T. கயினன்.

185. சந்தமுத் தமிழ்தேறுங் —கல்விக்
தலைவர் மகிழ்உமறுப் புலவரு[80]டன்
செந்தமிழ்க் கந்தசாமிப் —புலவ[81]னுஞ்
சீராட் டெனத்தமிழ் பாராட்டலே

186. (துரைமக்க ளருகிருக்க —மறுமன்பர்
சூழ்ந்துகை வாய்புதைத்துத் தாழ்ந்துநிற்கத்
திரைசுற்று மணித்தவிசில் —சருவந்து
சிறந்திடக் கிளைவந்து நிறைந்திருக்க

187. காணிக்கர் நிறைந்துநின்றே —அருட்கடைக்
கண்பார்த்து வாய்புதைத்துக் காரியஞ்சொல்லச்
சாணிற் சலாமுரைத்தே —தீவாந்தச்
சத்திரரும் வர்த்தகரு முத்திரஞ்சொல்ல

188. குச்சரியர் வச்சுமணியும் —கனகதரளம்
கொண்டுவந்து தெண்டனிட்டுக் கண்டுவணங்க
எச்சரிக்கை சாமியென்றே —பக்கலில்
இராசதக் காரர்நின்று வாசகஞ்சொல்ல)

189. மத்தளமுங் கைத்தாளமுந் —தம்பூரு
வாத்தியங்கள் கொண்டுபலர் கீர்த்தனஞ்செய்ய
முத்தமிழ் தான்தெரிந்தே —சமுகத்தில்
முதுதமிழ்க் கவிராசர் பதமுரைக்க

190. இலகிய கமலமகள் —சாந்த
இலட்சுமி யும்வீர லட்சுமியுங்
கலைமக ளுருவதன —சுவாமியென்
கர்த்த னெனப்பணிந்து நிர்த்தமிடத்

191. திருப்பாற் கடல்போலும் —சமுகத்தில்
திரைபோ னிரைசா மரையெறியத்
தருப்போற் கொடைகொடுக்கும் —வட்டாவில்
தாம்பூல முந்துகிலுந் தாங்கிநிற்க

192. (சங்கநிதி பத்மநிதிபோல் —நிதிவாரிச்
சடையாம லிருகையுங் கொடைகொடுக்க

---

80. உமறுப்புலவர் சுயிகாயகம் அவர்களின் ஜீவிய சரிதையைப் புராண மாக ஏறக்குறைய ஐயாயிரம் பாட்டுக்களில் பாடியுள்ளார். இதற்குச் சீறுப்புராணம் என்று பெயர். இதன் விரிவை இந்நூலின் முகவுரையிற் பார்க்க.

81. கந்தசாமிப்புலவர் திருப்பூவணப் புராணம், திருஆப்பனூர்ப் புராணம் முதலியன பாடியவர்.

இங்கிதசௌளந் தரியமின்னர் —ஆலாத்தி
யேந்தி யிருபுறமுஞ் சேர்ந்துநிற்க

193. நிறைந்தகலை மதிவந்தே —சமுகத்தில்
நின்றதென்ன வெள்ளைவட்ட மொன்றுநிழற்றச்
சிறந்தசிங் காதனத்தில் —செய்தகாதி
சிலைமத னைப்போலக் கொலுவிருந்தான்

194. இருந்தசமு கத்திற்சென்றேன் —உடல்பூரித்
திளகி மனமன்றுய்த் தளதளத்துக்
கருந்தடங் கண்ணியர்வேள் —செய்தகாதி
கன்னுவ தாரனைப் போலிருந்தான்)

195. விஞ்சையர்க் கதிகூலன் —காயல்
விசைய ரகுநாதப் பெரியதம்பி
கஞ்சமலர்ச் சரணத்தைக் —கண்ணுரக்
கண்டு களிகூர்ந்து தெண்டனிட்டேன்

196. (அடைக்கலங் காத்தபெருமான் —மன்னவர்க்
கரசு நிலைநிறுத்துஞ் செய்தகாதி
கடைக்கண்ணு லருட்பார்வையைக் —கண்ணுரக்
கண்டு களிகூர்ந்து தெண்டனிட்டேன்)

197. தெண்டனிட்டு வணங்கிநின்றேன் —செய்தகாதி
திருவுள மகிழ்ந்தரு ளகங்குளிர்ந்து
பண்டு பழகினவர்போல் —அடியேன்
பாட்டைச் செவிதாழ்த்துக் கேட்டனரே

198. கேட்டு மனதிலிரங்கி —அடியேன்
கிலேசந் தவிரநல்ல வாசகஞ்சொல்லி
காட்டிற் றிரிந்துபிழைப்பான் —இவன்றனை
நாமிசு லாமாக்கு[82] வோமெனவே

199. தாராள மாநினைந்தே —அடியேன்
தன்கையி லாயிரம் பொன்கொடுத்துப்
போன சதக்கத்துல்லா[83] —முன்பாகப்
பேதமில் லாக்கலிமா[84] வோதச்சொல்லி

---

82. இஸ்லாம் மதத்தில் சேர்ப்போம்.

83. சதகதுல்லா—இவரைப்பற்றிய செய்திகள் இந்நூல் முகவுரையிற் காண்க.

84. இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்துகொள்ளுகிறவர் சொல்லவேண்டிய விசுவாசப்பிரமாண வாசகம். லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல் லாஹி. (அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுளில்லை. முஹம்மது அல்லாஹ்வின் திருத்தூதர்).

200. பரிவுசெய் தெனையனுப்பக் —கொத்துவாப்
பள்ளி[85] வா சலில்வந் துள்புகுந்தேன்
எரிகதிர் மணித்தவிசில் —(ஆலின்க[86]
லெல்லா ருடன்சதக்கத் துல்லாவைக்
201. கண்டுதொழு திறைஞ்சிநின்றேன்) —இசலா
... ...
... ...
மாக்குமெனை யென்றொரு வாக்குச்சொன்னேன்

202. சடுதியில் சதக்கத்துல்லா —கலிமாத்
தாவுஞ்சொன் னரசை தாவுஞ்சொன்னேன்
[அண்டவொடு கலிமாவின் —பொருள்கள்
அனத்தையுஞ் சொன்னரென்றன் மனத்திருத்தி]

203. படிந்த பறுது[87]சுன்னத்து[88] —கலியுடன்[89]
பாத்திகா[90] வோதிச்சி ன்னைத்திரிந்தேன்
முடித்துக் கதா[91]தொழுதேன் —இவனல்ல
முசிலி[92] யெனச்சொல்லி யிசுலாத்தில்

---

85. வெள்ளிக்கிழமையிலும், வருஷம் இரு முறை ரமலான் நோன்பு முடிந்த மறுநாளிலும், துல்ஹஜ் மாதம் 10-ம் நாளிலும் முஸ்லிம்கள் திரளாகக் கூடித் தொழும் இடம்.

86. A. ஆலிம்—அறிந்தவர்.

87. A. பர்லு—அல்லாஹ்வின் கட்டளைப்படி நிறைவேற்ற வேண்டிய தொழுகை முதலிய கடன்கள்.

88. A. சுன்னத்-நபிகள்பிரான் நடந்துகாட்டிய முறைகளைப் பின்பற்றுதல்.

89. A. நபில்—மிகுந்த புண்ணியம் கிட்டவேண்டுமென்ற கருத்துடன் செய்யும் கிரியைகள்.

90. A. பாதிஹா—தொழுகை முடிந்த பின்னரும் நற்காரியங்கள் செய்யு முன்னரும் அல்லாவை வேண்டிக்கொள்ளுதல்.

91. A. கலா—கடன் தொழுகையை நிறைவேற்றுதல். விபரம் தெரிந்த வயதிலிருந்து அநுதினமும் ஐந்து வேளை தொழுவது ஒவ்வொரு முஸ்லிமின் கடமை. இவ்விதம் செய்யாதவர்கள், தங்கள் வாழ்நாளில் எச்சமயத்திலேனும் மார்க்கக் கிரியைகளைச் சரிவர நடத்தவேண்டுமென்ற மனஉறுதியுடன் ஐந்து வேளைத்தொழுகையைக் கடைப்பிடித்தால், முன் செல்லாகவேண்டிய தொழுகைக் காக அநுதினமும் கொஞ்சம் கொஞ்சமாக அந்தக் கடன்தொழுகையை நிறை வேற்றுதல்.

92. முஸ்லிம்.

204. தொழுகையுஞ் செக்காத்துடன்[93] —நோன்பையும்[94]
தொடுத்த படிபிடித்து முடிக்திடுநாள்
பழுதற்ற கசு[95]செய்யவே —போவென்றார்
பக்கத்தி லேயிருந்தோர் மக்கத்திலே[96]

205. சொற்படி யுற்பனமாய்ச் —சதக்கத்
துல்லா வுடன்சலாமுஞ் சொல்லிக்கொண்டேடன்
சற்குண நிதியனையான் —செய்தகாதி
தாமரைத் தாளுக்குச்ச லாமுரைத்தேன்

206. கன்னுவ தாரனையா —செய்தகாதி
காரியக் காரர்கள் வீரியமாய்ப்
பொன்னுலே வாழ்க்கைதனில் —தொழில்செய்யப்
போறபத் தாசினி லேறிக்கொண்டேடன்

207. அணிபெறு பத்தாசிலே —ஏறி
ஆட்க ளுடன்பொன்னுல் வாழ்க்கைசென்றே
திணிசுடர்ப் புரிசைசுற்றுங் —கோழிக்கூட்டிற்
செப்பமுடன் சென்றுமறு கப்பலேறி

208. கடற்றுறை வழிகடந்தே —இறங்கிமக்
காவுங் காபத்துல் லாவுங்[97]கண்டேடன்
இடத்தினி லெப்பைமாரும் —எல்லார்க்கு
மீகைகள் கொடுக்குஞ்ச ரீவு[98]களும்

209. அறபிகள் செய்து[99]களும் —செபிகு[100]க
ளாலின்க ளோதும்பள்ளி மோதீன்[101]களுந்
திறமுட னிருக்கக்கண்டேடன் —யாவர்க்கும்
செப்ப முடன்சலாம் செப்பினனே

---

93. எழைவரி.

94. ரமலான் மாதத்தில் முப்பது நாள் பகலில் உபவாசமிருத்தல்.

95. A. ஹஜ்—புண்ணிய கேஷத்திரங்களாகிய மக்கா, மதினை என்னும் இடங்களுக்கு யாத்திரை செய்தல்.

96. நபிகள் நாயகம் பிறந்த நகரம்.

97. கம்பதுல்லா—மக்காவில் இருக்கிற புராதனப் பள்ளிவாசல்.

98. A. ஷரீப்—தலைமைக்காரர்.

99. A. சய்யித்—நபிகள்பிரானின் திருப்புதல்வி பாத்திமாநாயகத்தின் பின்சந்ததியார்.

100. A. ஷைக்—போற்றத்தக்க முதியோர்.

101. A. முஅத்தின்—பள்ளிவாசலில் நிகழும் ஐந்துவேளைத் தொழுகையில் ஒவ்வொரு வேளையும் தொழுகைக்குக் கூப்பிடுகிறவர்.

210. மக்கமுங் கவா[102]வைபுங் —கடந்தந்த
வரிசைத் தலங்களெல்லாந் தெரிசித்தபின்
மிக்கபொறுக் கான்படியே —அடியேன்
மேலோனைத் தொழுதொரு பாலிருந்தேன்

211. அய்யமில்லா தத்தலத்தில் —ஓதி
அருந்தவம் புரிந்தங்கே யிருந்ததற்பின்
மைதவழ் முகிற்குடையார் —அரசுசெய்
(மதிலு[103] தனக்கிரு பதுகாளில்

212. போனேன் மதிலுவில் —மதிலைப்
புரிசையெல் லாங்கண்டேன் வரிசையுடன்
தானே யகமகிழ்ந்து —திருவடி
சார்ந்த தலத்தைக்கண்டு சேர்ந்தேனே

213. செல்லக் குடைதரித்தோர் —மதிலைச்
செகமெலாம் புகழ்மக மதுநயினர்[104]
சொல்லிற் சுவபதிபோல் —வாஞ்சையாய்த்
துலங்கிய மாளிகை வலஞ்சுற்றினேன்

214. சுற்றிவந் ததிரே நின்றேன் —அவிடத்தில்
துய்யோன் மறையோதுஞ் செய்துகள்முன்னே
வெற்றிச் சலாமுரைத்தேன் —அவிடத்தில்
மேலோனைத் தொழுதொரு பாலிருந்தேன்

215. வரிசை நபியிறசூல்[105] —முகம்மது
மந்தார முகிற்குடைக் கொந்தாலத்தை
அருகிலே சென்றநபியைப் —போற்றி
ஆத்திரந் தீர்ந்திடத் தோத்திரஞ்செய்தேன்

216. படியேழ் புகழ்நபியை —அவ்வதுல்லா
பாலக ராமிற சூல்நபியை
அடியேன் மனக்குறையும் —போகவென்
னத்திரந் தீர்ந்திடத் தோத்திரஞ்செய்தேன்)

---

102. A. கஃபா.

103. மதீனு—நபிகள்பிரான் காலத்திலும், அவர்களுக்குப்பின் நான்கு கலீபாக்கள் காலத்திலும் விளங்கிய முஸ்லிம் ஏகாதிபத்தியத்தின் தலைநகரம்.

104. A. முஹம்மது + T. நயினர்—முஹம்மது நபி.

105. A. நபி—(அறிவிக்கிறவர்) + A. ரசூல் (தூதர்).

217. போற்றித் துவா[106]வோதியே —பரவசமாய்ப்
புத்தி மயங்கியொரு நித்திரைசெய்தேன்
எற்றுக் கவுலா[107]க்கியே —எனக்குமுன்
னிருந்த காலுங்கையும் வளர்ந்திடவே

218. சுறுக்கா வெழுந்திருந்தேன் —எங்களிற
சூலரு ளாற்கையுங் காலுங்கண்டே
குறிப்பா யதிசயித்தே —ஈமான்[108]
கொண்ட பலன்கைம்மேல் கண்டேனே†

219. [காயலின் மகராயன் —செய்த
காதியைத் திசைநோக்கிக் கைபெடுத்தேன்
காயென வுபசரித்த —மாமுகயினர்
தன்னையு நினைந்தே தாழ்ச்சிசெய்தேன்

220. அறபுக் கரையுமக்கமு —மாச
ரவர்வாழி யவர்குல முறைவாழி
குறைசி[109]க் கிளையும்வாழி —செயிதுக்
கூட்டமும் வாழிபுறக் கான்வாழி

221. ஆழிசூழ் புவிவாழி —செருவில்
அரிய துரைசேது பதிவாழி
கீழக் கரைவாழி —சிங்கக்
கேசச் சதக்கத்தல் லாவாழி

222. தீனவர் குலம்வாழி —செய்தகாதி
செல்வமுங் கல்வியுந் தினம்வாழி
ஆனமதி மூன்றுமழை —பெய்தே
அனைவோரும் வாழிரப்பில் ஆலமீனே[110].]

---

106. A. துஆ—அல்லாஹ்வை இரங்கி வேண்டுதல்.

107. A. கபூல்—ஏற்றுக்கொள்ளுதல்.

108. A. ஈமான்—நம்பிக்கை.

† "நாயனை வணங்கிக்கொண்டு—இறசூல்
நபியையும் புகழ்ந்துகொண் டதிசயித்தேன்".

இந்த அடிகள் எட்டில் அதிகமாக உள்ளன.

109. A. குறைஷி—நபிநாயகம் அவர்களின் குலத்தின் பெயர்.

110. A. ரப்பில் ஆலமீன்—எல்லா உலகங்களையும் காத்தருளும் ஆண்டவன்.

அனுபந்தம்

சீதக்காதியைப் படிக்காசுப்புலவர் பாடியவை

1. காய்ந்து சிவந்தது சூரிய காந்தி கலவியிலே
தோய்ந்து சிவந்தது மின்னர் நெடுங்கண் டொலைவில்பன் னூல்
ஆய்ந்து சிவந்தது பாவாணர் நெஞ்ச மனுதினமும்
ஈந்து சிவந்தது மால்சீதக் காதி யிருகரமே.

2. ஓர்தட்டி லேபொன்னு மோர்தட்டி லேநெல்லு மொக்கவிற்குங்
கார்தட் டியபஞ்ச காலத்தி லேதங்கள் காரியப்பேர்
ஆர்த்தட்டி னுங்கட்டு வாராம லேயன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே.

3. நேசித்து வந்த கவிராசர் தங்கட்கு நித்தநித்தம்
பூசிக்கு நின்னைப் பொருளொன்று மேமற்றைப் புல்லர்பொருள்
வேசிக்குஞ் சந்து நடப்பார்க்கும் வேசிக்கு வேலைசெய்யுந்
தாசிக்கு மாகுங்கண் டாய்சீதக் காதி தயாநிதியே.

4. ஈயாத புல்ல ரிருந்தென்ன போயென்ன எட்டிமரங்
காயா திருந்தென்ன காய்த்துப் பலனென்ன கைவிரித்தாப்
போயா சகமென் றுரைப்போர்க்குச் செம்பொன் மிடைபிடியாய்
ஓயாம லீபவன் மால்சீதக் காதி யொருவனுமே.

5. என்னனைக் கன்றழுத்தினை குனிக்கு மிறையினை யினைக்குமெயன் று
மன்னனைக்கன் றிப்பின்னனைக் குதவாவண்புளால் வருந்தி வாடுவனை
முன்னனைக்கொன் று பின்னனைப்புரந்த முதுபகையவன் பிதாவுறுமற்
கன்னனைக்கொன் றுவிசயனைப்புரந்தகவுத்துவாகாயலா திலனே.

சீதக்காதி இறந்தபோது படிக்காசுப்புலவர் பாடிய கையறம்

*6. பூமா திருந்தென் புவிமா திருந்தெனிப் பூதலத்தில்
நாமா. திருந்தென்ன நாமிருந் தென்னநன் னுவலர்க்குக்
கோமா னழகமர் மால்சீதக் காதி கொடைமிருந்த
சீமா னிறந்திட்ட போதே புலமையுஞ் செத்ததுவே.

7. விண்ணுக்கு மண்ணுக்கும் பேராய் விளங்குதே வேந்தரெனுங்
கண்ணுக்கி னிய துரைசீதக் காதி கமலநிகர்
தண்ணுக் கிசைந்த வதனசந் த்ரோதய சாமியிந்த
மண்ணுக்கு ளேயொளித் தான்புல வோர்முகம் வாடியதே.

---

* இப்பாட்டு நமச்சிவாயப்புலவர் பாடியதென்பர். (தனிப்பாடல்).

8. தேட்டாளன் காயற் றுரைசீதக் காதி சிறந்தவச்ர
நாட்டான் புகழ்க்கம்ப நாட்டிவைத் தான்றமிழ் நாவ்லரை
ஓட்டாண்டி யாக்கி யவர்கடம் வாயி லொருபிடிமண்
போட்டான் அவனு மொளித்தான் சமாதிக் குழிபுகுந்தே.

9. மறந்தா கிலுமரைக் காசுங்கொ டாமட மாந்தர்மண்மேல்
இறந்தாவ தென்ன இருந்தாவ தென்ன இறந்துவிண்போய்ச்
சிறந்தாளுங் காயற் றுரைசீதக் காதி திரும்பிவந்து
பிறந்தா லொழியப் புலவோர் தமக்குப் பிழைப்பில்லையே.

ஷை வள்ளல நமச்சிவாயப்புலவர் பாடியவை

10. மைப்போ தகமும் வளநாடுஞ் செந்தமிழ் வாணர்க்கருள்
கைப்போ தகமனை யான்சீதக் காதியைக் காத்திருந்த
அப்போ தறிந்திலம் இப்பாழும் பணத்தின்அருமையெல்லாம்
இப்போ தறிந்தனம் ஈயாத லோப ரிடத்திற்சென்றே.

11. தடக்கும்ப கிம்புரிக் கொம்ப சலப்பெருந் தந்திபட
நடக்குந் துரங்கத் துரைசீதக் காதிநன் னுட்டினல
வடக்குங் குமக்கொங்கை மின்னே யவன்றெரு வாயிலிலே
கிடக்குங் கலியும் பராசக் ரத்ன கிரீடமுமே.

(தாய் சோதிடரை நிந்தித்துரைத்தல்)

12. மாகத்தத் தும்புக ழான்பகை வேந்தர் மகுடம்பொடி.
யாகத்தத் தும்பரி யான்சீதக் காதி யணிமலரின்
ஏகத்தத் தும்பி யிசைபாடு மார்பனி லென்மகட்கோர்
மோகத்தத் துண்டென்று சொன்ன ரிலைமுன் மொழிந்தவரே.

(பாலனைப் பழித்தல்)

13. வேளா மழகன் றுரைசீதக் காதியென் வீட்டிலொரு
நாளா கிலும்வரக் காண்கில னேயெந்த நாளுமவன்
தோளா லணையுஞ் சுகவாலி பத்தைத் துணிக்கவொரு
வாளாய்ப் பிறந்தனை யேமக னேயென்ன வாயுனக்கே.

சீதக்காதி பேரில் தாசி பாடியது

14. தினங்கொடுக்குங் [1]கொடையானே
தென்காயற் பதியானே [2]சீதக் காதி
இனங்கொடுத்த [3]வுடைமை யல்ல
[4]தாய்கொடுத்த வுடைமையல்ல [5]எளியா ளாசை

---

1. கையானே.
2. செய்தக்காதி.
3. தனமல்ல.
4. ஆய்கொடுத்ததனமுமல்ல.
5. எளியேனித்தம்.

மனங்கொடுத்து மிதழ்கொடுத்து மபிமானந்
தீனைக்கொடுத்தும்[6] மருவி ரண்டு
[7]தனங்கொடுத்த வுடைமையெல்லாங் கள்ளர்கையிற்
பறிகொடுத்துத் தவிக்கின் றேனே.

15. பத்தாய மீதுங் கடாரங்க டோறும் பணத்தைவைத்துச்
செத்தா ரவர்ஈரர் தாமல்ல வேசெப்புக் காதியென்போன்
உத்தாய மீதுந்தன் கையா லிறைத்தும் ஒருபணமும்
வைத்தா னிலையென்றும் வைத்தான்றன் கீர்த்தியை மாத்திரமே.

தலைவன் பொருளீட்டற்குக் கப்பலேறிப் போயினமை,
தலைவி அவன் பிரிவாற்றுது வருந்திக்கூறல்.

16. தரைகண்ட மட்டும் படர்ந்தண்ட கோளமுந் தானியங்கும்
உரைகண்ட கீர்த்தி பெறுஞ்சீதக் காதி புலகினில்லென்
டிரைகண் டெழுங்கடன் மீதுதன் வங்கத்தைச் செல்லவிட்டுக்
கரைகண் டவனினங் காணுனென் னைசக் கடற்கரையே.

6. வளருங்கும்ப.
7. தனங்கொடுத்துந் தேடுதனம் பறிகொடுத்தே இப்படியான்.

பொருளடக்கம்

அப்பாஸ்கான்
அபூபக்கர்
அலி
அலிமர்தான் கான்
அப்துல்லா
அஹத் கான்
இமாம் கான்
உதுமான்
உமர் கலீபா
உமர்ப் புலவர்
எச்சப்ப நாயக்கன்
ஒளரங்குஜேப்
கத்லூ கான்
கந்தசுவாமிப் புலவர்
கானெ காளுன்
குட்டி மாப்பிள்ளை
சதக்கத்துல்லா
சந்தா வைரோயி
கோர்பரே
சப்தர் கான்
சமத் கான்
சிகோஜி ராயன்
துல்பகார் கான்
சையிது நயினுன்
சேதுபதி ரகுநாதன்
தாவூது கான்
நவாஜ் கான்
நாதிர் கான்
பஹ்லூல் கான்
பிரமன் அம்பட்டன்
மக்கா இஸ்மாயீல் கான்
மலிக் சுமந்தர் கான்
மாமு நயினாப் பிள்ளை
மீராப்பிள்ளை மரக்காயர்
முஹம்மது நபி
முஹம்மது கான்
முஹியுத்தீன்
ராமு ராயன்
விசய ரகுநாத பெரிய
தம்பி மரக்காயர்
ஷாத்பாஷ் கான்
ஸைதக் அப்துல் காதிர்
ஸைதக் கனி மரக்காயர்
ஹசன்
ஹுசைன்

இடப் பொருளாதி

அரியலூர்
ஆக்ரா
கண்ணனூர்
காயல்
காவேரி
கீழக்கரை
கோல் கொண்டா
கோழிக்கூடு
சிராகிரி
சீரங்கம்
செஞ்சி
சென்னபட்டணம்
சோல மஹல
திண்டுக்கல்
திருமருதூர்
திருப்பாலைக்குடி
தேவிபட்டணம்
தொண்டி
நால் கொண்டா
மக்கம்
மணக்குடி
மதிரை
மதுரை
பாலையாறு
புதுக்கோட்டை
ராமநாதபுரம்
வச்ரநாடு
வகுதை
வந்தவாசி
வாடி
வாலிகண்டபுரம்
வேலூர்

அரிய வழக்குச் சொற்கள்

அகலாத்து
ஆக்கினைக்களரி
ஆலிம்
இசுலாமாக்குதல்
இறசூல் நபி
ஈமான்
உச்சிக் கொள்ளுதல்
ஒட்டைக்காடு
கமர் பந்து
கலிமா
களச்சேவல்
கஃபா
கபூலாக்குதல்
காலிமார்
குச்சரியர்
குபிரான பேர்
குறைசிக்கினை
கைலாகு
கொத்துவாப்பள்ளிவாசல்
சக்காத்து
சகலாத்து
சதிர்
சரீவு
சருபந்து
சலக்கம்
சவுக்கை
சாணிப்பயல்கள்
சுக சுறுக்கு
சுன்னத்து
சையிது
சையிதுக் கூட்டம்
சோணங்கி நாய்
தக்லா
துடக்கு
துவா ஓதுதல்
தீனவர்
தீனோர்கள்
நசுரூணிகள்
நபியிறசூல்
நபில்
நிஷான்
பகீர்
பகால்
பத்தாசு
பற்லு
பாசாளம்
பாதிஹா ஓதுதல்
பிஸ்மி, விசுமி
புர்க்கான்
பொந்தலியர்
பொருக்கான்
முசிலே
மெய்வழக்கஞ் செய்தல்
மோதின்
ராசதக்காரர்
லாடாகள
லெப்பைமார்
வட்டா
வருக்கர்
வெள்ளை வட்டம்
றசூல் நபி
றப்பில் ஆலமீன்
ஸைதக்
ஹஜ்